# தேவனுடைய நித்திய நோக்கம்

Translated from the message spoken in April, 2014 in Chennai, India

By *Neil Buckman*

எபேசியருக்கு எழுதிய கடிதத்திலுள்ள மிகவும் பரிச்சயமான ஒரு பகுதியை நாம் வாசிப்போம்.

**வேத வாசிப்பு**: "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும்பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள் ஆதிகாலங்கள்முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் (*நோக்கம்*) இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாய்க் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" (எபேசியர் *3:8-12*).

**ஜெபம்:** பரிசுத்த பிதாவே, உம்முடைய வார்த்தையை நாங்கள் தியானிக்கும்போது உம்முடைய சத்தத்தைக் கேட்பதற்கான கிருபையை எங்களுக்கு அருளுமாறு கெஞ்சுகிறோம். ஆண்டவரே, எங்கள் இருதயங்களுக்குள் உம்மைப் பகிர்ந்தளிக்குமாறு ஜெபிக்கிறோம். உம்மைப்பற்றி நாங்கள் அறிவதற்குத் தடையாக இருக்கின்ற பரிச்சயத்திலிருந்து எங்களை விடுவிப்பீராக, பாதுகாத்துக் கொள்வீராக. ஆண்டவரே, பரத்திலிருந்து நீர் தராவிட்டால் எங்களால் ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். எனவே, இந்த வேளையை உம்முடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். உலகத் தோற்றத்துக்குமுன்பே நீர் உம்முடைய மக்களுக்காக ஆயத்தம்பண்ணி வைத்திருந்த பங்கை இன்று இந்த வேளையிலே எங்களுக்கு அருளுமாறு ஜெபிக்கிறோம். உம்முடைய உத்தமத்திற்காக நாங்கள் உம்மை ஆராதிக்கின்றோம். உம்முடைய வார்த்தையைப் பேசுவதற்கும், கேட்பதற்கும், மொழிபெயர்ப்பதற்கும் தேவையான அபிஷேகத்தை நீர் எங்களுக்கு அருள்வீராக. உம்முடைய நாமத்தை நாங்கள் ஆராதிக்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் அருமையான நாமத்தில் பிதாவே, ஆமென்.

## தேவனுடைய மறைவான இரகசியம்

எபேசியர் நிருபத்திலிருந்து நாம் வாசித்த இந்தப் பகுதி நமக்கு மிகவும் பரிச்சயமானது. நான் இந்தப் பகுதியைச் சிந்திந்துக்கொண்டிருந்தபோது எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது. தேவன் தம்முடைய இந்த நோக்கத்தைத் தலைமுறை தலைமுறையாக ஏன் மறைத்து வைத்திருந்தார் என்று நான் யோசித்துப்பார்த்தேன். தேவன் தம்முடைய நித்திய நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதிலே எப்போதும் குறியாகவும், உறுதியாகவும் இருந்தார். ஆனால், அவருடைய இந்த நோக்கம் மறைந்திருந்தது. ஆனாலும், எல்லா நூற்றாண்டுகளிலும் தேவன் என்ன செய்துகொண்டிருந்தார் என்பது தங்களுக்குத் தெரியும் என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால், உண்மையில் அவருடைய உண்மையான நோக்கம் மறைவாகவே இருந்தது. அந்த நோக்கம் ஏன் மறைவாக இருந்தது? தேவன் தாம் செய்யப்போவதை மக்களுக்கு வெளிப்படையாகச் சொல்லியிருக்கலாமே! அவர் அதை ஏன் மக்களுக்கு வெளிப்படையாகச் சொல்லவில்லை?

## தேவனுடைய இரகசியம் வெளியாக்கப்படுதல்

இந்தக் கேள்விக்குப் பதில் என்னவென்றால் ஆண்டவராகிய இயேசு வெளிப்படுத்தப்படாதவரை அதை அவர்களுக்குச் சொல்வது அன்றைக்குச் சாத்தியம் இல்லை. ஆண்டவராகிய இயேசு வெளியாகாதவரை தேவன் தம் நோக்கத்தை அவர்களுக்குச் சொல்வது கூடாத காரியம். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்துக்கு வந்து தம்மை வெளிக்காண்பிக்காதவரை, அவரைப் பார்க்காதவரை, தேவனுடைய நோக்கத்தை அறிவது சாத்தியம் இல்லை. ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் வந்து, தம்மை வெளிப்படுத்தினார்; அற்புதங்கள் செய்தார்; போதித்தார்; ஆனால், அப்போதுங்கூட அவருடைய நோக்கம் வெளிப்படுத்தப்படவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தபோதும், தேவனுடைய நோக்கம் வெளிப்படுத்தப்

படவில்லை. இதற்குப் பின்புதான் பவுலும், மற்ற சீடர்களும் தேவனுடைய பரம இரகசியத்தைப் பார்க்கவும், புரிந்துகொள்ளவும் ஆரம்பித்தார்கள்.

இது, இயேசு கிறிஸ்து வந்தால் போதும், உடனே தேவனுடைய நோக்கம் தெரிந்துவிடும் என்பது போன்ற எளிமையான காரியம் அல்ல. அவர் மரிக்க வேண்டும்; அவருடைய மரணம் நிகழாத வரை, அவருடைய உயிர்த்தெழுதல் நடைபெறாதவரை, இந்த நோக்கம் நிறைவேறமுடியாது. அவருடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் வெறுமனே வெளியே நடைபெற்ற சம்பவங்களாக அல்ல, மாறாக அவைகளை *நாம் நம்முடைய ஆவியில் பார்த்து, புரிந்துகொண்டு அங்கு நிஜமாக மாறாதவரை தேவனுடைய நித்திய நோக்கம் நிறைவேறாது.* அப்போதுதான் நாம் தேவனுடைய நோக்கத்தைப் புரிந்துகொள்ள ஆரம்பிப்போம்.

எனவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையினால் தேவனுடைய நோக்கம் நிறைவேறிவிட்டது என்று நாம் சொல்லிவிட முடியாது. *அவருடைய வருகை தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு வழிவகை அல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே அந்த நோக்கம். அவர் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிற வழியல்ல, உபாயம் அல்ல; அவரே தேவனுடைய நோக்கம்.*

எனவே, தேவனுடைய நோக்கம் என்னவென்று நாம் புரிந்துகொள்ளவேண்டுமானால் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நெருக்கமாகவும், தெளிவாகவும் உற்றுப்பார்க்க வேண்டும். நாம் அவரைக் கூர்மையாகக் கண்டு, உற்று நோக்கிப் பார்க்கும்போதுதான் தேவனுடைய நோக்கம் என்னவென்றும், அதை நிறைவேற்ற அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்றும் நமக்கு மெல்லமெல்ல விரிவடைய ஆரம்பிக்கும்.

### மனுவுருவாதல்-மனிதன்

இப்போது நாம் எங்கு தொடங்கலாம்? பெத்லகேமில் தொடங்குவோம். அசாதாரணமான, வியக்கத்தக்க அந்த நிகழ்ச்சியில் தொடங்குவோம். "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார், அவ்வளவுதானே!" என்று ஒருவேளை நாம் அதை மிகச் சாதாரணமாகக் கருதலாம் அல்லது அவர் ஒரு கன்னியிடம் பிறந்தது மிகவும் ஆச்சரியம் என்று சொல்லக்கூடும். ஆனால், உண்மையான காரியம் அதுவல்ல. இது ஒரு சாதாரணமான, வழக்கமான பிறப்பல்ல. மாறாக, *இது மனுவுருவாதல், மனுவுருவேற்றல்! தேவன் மனிதனானார்! நித்திய மகன் காலவெளிக்குள் நுழைந்து ஒரு மனிதனானார், மனுவுருவெடுத்தார்.*

நமக்கு ஒரு சின்ன பிரச்சினை இருக்கிறது; அது ஆதி விசுவாசிகளுக்கு இருந்த பிரச்சினைக்கு எதிர்மாறான பிரச்சினை. நம்முடைய சிக்கல் அவர்களுக்கு இருந்த சிக்கலுக்கு நேர்மாறான சிக்கல். ஆதி விசுவாசிகள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உற்றுப்பார்த்தபோது அவரை வெறுமனே ஒரு மனிதராகத்தான் கண்டார்கள். பிறகு, அவர் பேசுவதைக் கேட்கக்கேட்க மெல்ல மெல்ல ஒரு காரியம் அவர்களுக்குப் புலப்பட ஆரம்பித்தது. "இவர் பேசுகின்ற வார்த்தைகளெல்லாம் ஒரு மனிதன் பேசுகின்ற வார்த்தைகள் அல்ல; இது தேவனுடைய வார்த்தைகள். வேறு எந்த மனிதனும் இந்த மனிதனைப்போல் ஒருபோதும் பேசினதில்லை," என்று அவர்கள் காணத் தொடங்கினார்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மிக எளிமையான காரியங்களைப் பேசினார். "உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன," என்று அவர் சொன்னார். இன்று இந்த வார்த்தைகள் நமக்கு மிகவும் பரிச்சயமானவை. ஆனால், "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று அவர் சொன்னதை விசுவாசிகள் முதன்முதலாகக் கேட்டபோது அவர்களால் அதை நம்பமுடியவில்லை. "ஒரு மனிதன் இன்னொருவனுடைய பாவங்களை எப்படி மன்னிக்க முடியும்? ஒரு மனிதன் எப்படி இப்படிப் பேச முடியும்? தன்னைக்குறித்து இவர் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறார்? என்ன நினைத்துக் கொண்டு இந்த மனிதன் இப்படிப் பேசுகிறார்?" என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் பேசிய காரியங்கள் மிகவும் அற்புதமானவை. இது ஆதி சீடர்களின் பிரச்சினை. அவர் தேவனுடைய குமாரன் என்பதை அவர்களால் பார்க்க முடியவில்லை.

நம்முடைய பிரச்சினை என்ன? நம்முடைய பிரச்சினை அவர்களுடைய பிரச்சினைக்கு எதிர்மாறானது. நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பார்க்கும்போது நாம் தேவனுடைய குமாரனைப் பார்க்கிறோம்; மகிமையின் கர்த்தரைப் பார்க்கிறோம்; இப்போது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற நித்தியமானவரைப் பார்க்கிறோம். எனவே, அவர் ஒரு மனிதர் என்பதை

நாம் எளிதில் மறந்துவிடுகிறோம். அவர் ஒரு மனிதர்! அவர் ஒரு மனிதர் என்ற உண்மையின் ஒரு பகுதியை நாம் அவரிடமிருந்து அகற்றினால்கூட நமக்கு ஐயோ!

ஒருவர் இந்த உண்மையை ஒருமுறை மிகவும் அற்புதமாக விளக்கிச் சொன்னார். அதுதான் நான் கேட்ட மிகச் சிறந்த விளக்கம். "அவர் ஒரு மனிதர்; எனினும், அவர் தேவன். அவர் தேவன்; எனினும், அவர் ஒரு மனிதர்." இதுதான் அவர் சொன்ன விளக்கம். இதற்குமேல் எந்த விளக்க மும் தேவைப்படாது என்றே நான் நினைக்கிறேன். இது நமக்கு அப்பாற்பட்ட ஓர் இரகசியம். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக எப்படி ஒரு மனிதனில் வாசம்பண்ண முடியும்? இதற்கு நம்மால் பதில் சொல்ல முடியாது. ஆனால், நாம் அவரை உற்றுநோக்கும் போது, அங்கு ஒரு மனிதனைப் பார்க்கிறோம்.

ஆதியாகமத்தில், "பின்பு தேவன்: நமது சாயலின்படி மனிதனை உண்டாக்குவோமாக," என்று சொன்னார் என்று நாம் வாசிக்கிறோம். அவர் மனிதனைப் பூமியின் மண்ணினால் உண்டாக்கினார். பிறகு என்ன செய்தார்? அவனுடைய நாசியில் சுவாசத்தை ஊதினார்; மனிதன் ஜீவிக்கிற ஆத்துமாவாக மாறினான். தேவன் தாம் உண்டாக்கின மனிதனைப் பார்த்து, "மிகவும் நன்றாயிருக் கிறது," என்று சொன்னார். மனிதனைத் தம் சொந்த சாயலின்படி உண்டாக்க வேண்டும் என்பது தேவனுடைய இருதயத்தின் விருப்பம். இந்த மனிதன் மிகவும் நன்றாக இருந்தான். ஆனால், என்ன நடந்தது என்று நமக்குத் தெரியும். தேவனுடைய படைப்பு சீக்கிரத்தில் மிகவும் கெட்டுப் போனது. எல்லா நூற்றாண்டுகளிலும் தம்முடைய படைப்பு கெட்டுப்போயிருப்பதையும், செத்துப் போயிருப்பதையும் தேவன் கண்டார்.

## பரிபூரணமான மனிதன்

ஆனால், இப்போது இதோ ஒரு மனிதன் இருக்கிறார்! ஒரேவொரு மனிதன்! தேவன் இந்த மனிதனை நோக்கிப்பார்க்கும்போது அவருடைய இருதயம் பூரிப்பால் துள்ளுகிறது. "இவர் என் அன்பின் குமாரன். இங்கு! இதோ! இந்த மனிதர், என் இருதயத்தின் எல்லா விருப்பங்களையும், ஆசைகளையும் நிறைவேற்றுகிறார்," என்பதால் அவருடைய இருதயம் களிகூருகிறது.

பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் வந்து அவரைத் தம் வீடாக்கிக்கொண்டார்; அவர் தம் இல் லத்தை அந்த மனிதனில் அமைத்தார். ஏனென்றால், இந்த மனிதனில் அவருக்குப் பூரணமான இளைப்பாறுதல் கிடைத்தது. இந்த மனிதனில் எந்த முரண்பாடும் இல்லை; இந்த மனிதனில் எந்த எதிர்ப்பும் இல்லை; இந்த மனிதனில் வீழ்ச்சியின் எந்தச் சுவடும் இல்லை. இந்த மனிதனில் தேவனுக்குச் சமாதானமும், ஐக்கியமும் உண்டாயிற்று. ஆகவே, பிதாவானவர் தம் மகனில் பூரிப் படைந்தார், களிகூர்ந்தார். பரிசுத்த ஆவியானவரும் குமாரனில் பூரிப்படைந்தார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை எப்படிக் குறிப்பிட விரும்பினார்? *மனித குமாரன்* என்று குறிக்கப்படுவதையே அவர் விரும்பினார். *மனிதன்* என்று குறிக்கப்படுவதிலும், இருப்பதிலும் அவர் மகிழ்ந்தார். எனவே, நாம் அவரைப் பாக்கும்போது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனாகப் பிறந்தது ஒரு பிரத்தியேகமான, தனிச்சிறப்புவாய்ந்த செயலாகும். இது ஒரு விசேஷ மான படைப்பாகும். அவருடைய பிறப்பில் நாம் தேவனுடைய அசைவைப் பார்க்கிறோம். ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்புவரை தேவன் அமைதியாக இருந்ததுபோல் தோன்றியது. ஆனால், அவருடைய பிறப்பில், இப்போது தேவனுடைய அசைவைப் பார்க்கிறோம்; அவர் எதையோ செய்துகொண்டிருக்கிறார்; அவர் எதையோ செய்து முடிக்கப்போகிறார். ஏனென்றால், கடைசியாக, அவருடைய இருதயத்தைக் களிப்பாக்குகிற, பூரிப்பாக்குகிற, ஒரு மனிதன் இதோ இங்கு இருக்கிறார்!

இந்த மனிதனுக்கும் மனுக்குலத்தின் மற்ற மனிதர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு என்ன? இந்தக் கேள்விக்கான பதில் யோவான் நற்செய்தியின் தொடக்கத்திலே இருக்கிறது. "அவருக்குள் *ஜீவன்* இருந்தது. அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாக இருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக் கிறது. இருளானது ஒளியைப்பற்றிக்கொள்ளவில்லை" (யோவான் 1:4, 5). இதுபோன்ற ஜீவன் அன்றைக்கு ஒன்றேவொன்றுதான் இருந்தது, ஒரேவொரு மனிதனிடம்தான் இருந்தது. அந்த ஜீவன்தான் ஒளி. ஆனால், அந்த ஒளி மிகவும் இருண்ட இடத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. முழு மனுக்குலமும் ஆதாமின் பிள்ளைகளாக இருந்தார்கள். ஆனால், இந்த **மனிதனிடமோ** இன்னொரு ஜீவன் இருந்தது. இந்த ஜீவன்தான் இந்த மனிதனுக்கும் மனுக்குலத்தின் மற்ற எல்லா மனிதர்களுக்கும் இடையே இருந்த வித்தியாசம்.

## ஜீவ மரம்

நாம் மீண்டும் ஏதேன் தோட்டத்துக்குச் செல்வோம். அதுதான் மனிதன் வீழ்ந்த இடம்! அதுதான் மனிதன் தோற்றுப்போன இடம்! அதுதான் மனிதன், "நான் தேவனைப்போல் ஆவேன்" என்று சொன்ன இடம். அதுதான், "தேவனில்லாமல் நான் தனியாக வாழ்வேன்" என்று சொன்ன இடம். ஆனால், அது பேரழிவு என்று நமக்குத் தெரியும்.

அந்தத் தோட்டத்தைக் கொஞ்சம் நோட்டம் பார்த்தால் இன்னொரு காரியம் அங்கு இருப்பது தெரியும். அங்கு நாம் எதைப் பார்க்கிறோம்? தோட்டத்தில் நாம் எதைப் பார்க்கிறோம்? இன் னொரு மரம்! ஜீவ மரம்! இந்த மரத்தைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. ஆனால், இந்த மரத்தில் மனிதனிடத்தில் இல்லாத வேறொரு ஜீவன் இருக்கிறது என்று நமக்குத் தெரியும். அந்த ஜீவன் மனிதனிடத்தில் இருந்த உயிர் அல்ல. இது வித்தியாசமான ஜீவன்.

"மனிதன் தேவனுடைய இந்த ஜீவனைப் பெறவேண்டும் என்று விரும்பியிருந்தால், அவனைப் படைக்கும்போதே அவர் இந்த ஜீவனை அவனுக்குள் ஏன் வைத்திருக்கக்கூடாது? ஒரேவொரு வார்த்தை சொல்லி அவர் அந்த ஜீவனை மனிதனுக்குள் வைத்திருக்கலாமே!" என்று நாம் சொல்லலாம். அதற்குப் பதில் என்னவென்றால் தேவனால் அப்படிச் செய்ய முடியாது. ஏன் முடி யாது? ஏனென்றால், ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டவன். ஆனால், இந்த ஜீவனோ சிருஷ்டிக்கப்படாத ஜீவன். சிருஷ்டிக்கப்படாத ஜீவன் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்குள் இருக்க முடியாது. ஆனால், மனிதன் இந்த ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவன்தான் மனிதனை உண்டாக்கினார்; அவனை உண்டாக்கினபின் அவன் 'மிகவும் நன்றாக' இருந்தான். படைக்கப்பட்ட இந்த மனிதனிடத்தில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், அவன் வெறுமனே படைக்கப்பட்டவன். படைக்கப்பட்ட இந்த மனிதனுக்கு தேவன் அதைவிட அதிகமாகக் கொடுக்க விரும்பினார்.

## தெய்வீக ஜீவன்

நாம் தொடர்ந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பார்ப்போம். இங்கு நாம் ஒரு மனி தனைப் பார்க்கிறோம். இவரில் சிருஷ்டிக்கப்படாத ஜீவன் இருக்கிறது. இந்த ஜீவன் ஒளியைப் போல் பிரகாசிக்கிறது; இந்த ஜீவனிலிருந்த பாய்ந்தோடிய அன்பைப் பார்க்கிறோம்; இந்த ஜீவனின் பரிபூரணத்தைப் பார்க்கிறோம்; இந்த ஜீவனின் ஞானத்தைப் பார்க்கிறோம்; இந்த ஜீவ னின் வல்லமையைப் பார்க்கிறோம். மனிதன் ஒரு கணப்பொழுதில் விழுந்துபோனான் என்று நமக்குத் தெரியும். ஆனால், சாத்தான் தன் முழு பலத்தோடு இந்த மனிதனைத் தாக்கியபோதும் அவர் விழவில்லை. இவர் வெற்றிபெற்றார். இது வெற்றிபெற்ற ஜீவன்; இந்த ஜீவன் அழிக்க முடியாத, அவிக்கமுடியாத ஜீவன்; இந்த ஜீவன் எல்லாத் தேவைகளையும் நிறைவுசெய்யக்கூடிய ஜீவன். "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் ஒருக்காலும் தாகமடையான்."

நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உற்றுப்பார்க்கும்போது, "தேவன் இதைத்தான் விரும்பு கிறார்," என்று நாம் சொல்லுகிறோம். இதோ ஒரு மனிதன்! தேவன் எப்போதுமே இந்த மனி தனைத்தான் விரும்பினார். ஆனால், இங்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. இப்படிப்பட்ட மனிதன் ஒரேவொருவர்தானே இருக்கிறார். இந்த முழுமனுக்குலத்திலும் இப்படிப்பட்ட மனிதன் ஒரேவொரு வர்தானே இருக்கிறார்.

## சிலுவை மரணம்-மனிதன்

யோவான் நற்செய்தியில் நாம் ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கிறோம். அந்த நிகழ்ச்சி யோவான் 12 ஆம் அதிகாரத்தில் இருக்கிறது. ஒருநாள் சில கிரேக்கர்கள் இயேசுவைப் பார்க்க விரும்பி னார்கள். அவர்கள் இயேசுவின் சீடர்களிடம் வந்து, "நாங்கள் இயேசுவைக் காண விரும்பு கிறோம்," என்று சொன்னார்கள். அப்போது, விநோதமான ஒன்று நடைபெற்றது. எத்தனையோ பேர் இயேசுவைப் பார்க்க வந்திருக்கிறார்கள். அவர்களை வரவேற்று, அவர்களுக்குத் தேவை யானதை வழங்குவதில் அவர் ஒருநாளும் களைத்ததேயில்லை. யோவான் 12:23இல் யோவான் எழுதுகிறார். இயேசு அவர்களை நோக்கி, "மனுஷ குமாரன் மகிமைப்படும்படியான வேளை வந் தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக் கும்," என்று சொன்னார். இங்கு நாம் எதைப் பார்க்கிறோம்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

தம்மை ஒரு கோதுமை மணிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். ஒரு கோதுமை மணிக்கும், ஒரு சிறிய கல் துண்டுக்கும் இடையே பெரிய வித்தியாசம் இருக்கிறது. பார்ப்பதற்கு இரண்டும் ஒன்றுபோல் தோன்றலாம். ஆனால், வித்தியாசம் என்னவென்றால் கோதுமை மணியில் ஜீவன் இருக்கிறது. எனவே, நீங்கள் ஒரு கோதுமை மணியைக் கையில் வைத்துக்கொண்டு, "இதோ, ஒரு கோதுமை மணி! இதில் ஜீவன் இருக்கிறது," என்று சொல்லலாம்.

எகிப்திலுள்ள பிரமிடுகளில் கோதுமைகளைக் கண்டுபிடித்தார்கள் என்று நான் கேள்விப்பட்டிருக் கிறேன். இத்தனை நூற்றாண்டுகளாக அந்தக் கோதுமை மணிகள் அங்கு இருந்திருக்கின்றன. நல்லது, ஆனால் கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததென்றால், அதன் பலன் என்ன? அதன் பலன் நூற்றுக்கணக்கான கோதுமை மணிகள் உருவாகும்; ஒரு கோதுமை மணி நூறு கோதுமை மணிகளாக மாறுகிறது.

சரி, முதல் கோதுமை மணியிலே ஜீவன் இருந்தது. இப்போது இந்த நூறு கோதுமை மணிகளின் காரியம் என்ன? இந்த நூறு கோதுமை மணிகளிலும் அதே ஜீவன் இருக்கிறது. முதல் கோதுமை மணியில் இருந்த ஜீவன் எந்த அளவுக்கு இந்த நூறு கோதுமை மணிகளில் இருக்கிறது? நூற்றில் ஒரு பங்குதான் இந்த ஒவ்வொரு கோதுமை மணியிலும் இருக்கிறதா? இல்லை. முதல் கோதுமை மணியில் எந்த ஜீவன் இருந்ததோ அதே ஜீவன் அதே அளவுக்கு இந்த நூறு கோதுமை மணிகளிலும் இருக்கிறது. ஒவ்வொரு கோதுமை மணிக்குள்ளும் அதே ஜீவன் இருக்கிறது.

எனவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இங்கு என்ன சொல்லுகிறார் என்பதை நாம் பார்க்கிறோம். "இந்த மனிதர்கள் வந்து என்னைப் பார்க்க விரும்புகிறார்கள். அவர்கள் உள்ளே வருவார்கள்; நாம் பேசுவோம்; பேசிவிட்டு அவர்கள் போய்விடுவார்கள்; அவர்கள் சில நினைவு களைச் சுமந்துகொண்டு போய்விடுவார்கள். அவர்கள் என்னோடு பேசியிருப்பார்கள். அவர்கள் என்னிடமிருந்து எதையோ கற்றுக்கொண்டிருப்பார்கள். ஆனால், எதுவும் மாறியிருக்காது. ஏனென்றால், என்னில் மட்டுமே அந்த ஜீவன் இருக்கிறது. இந்தக் கோதுமை மணி தனியாகவே இருக்கிறது," என்று அவர் சொல்லிவிட்டு, "வேளை வந்துவிட்டது. நான் மகிமைப்படும் வேளை வந்துவிட்டது. இனிமேல் ஒரேவொரு கோதுமை மணி மட்டும் இருக்க முடியாது. அநேகக் கோதுமை மணிகள் இருக்க வேண்டும். இந்த ஜீவனையுடைய அநேக மனிதர்களும், மனுஷி களும் இருக்க வேண்டும்," என்று அவர் சொல்லுகிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் தொடர்ந்து பார்ப்போம். "வேளை வந்துவிட்டது" என்று அவர் சொன்னதின் பொருள் என்னவென்று இப்போது நாம் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். தாம் மரிக்கப்போகிற வேளையையே அவர் குறிப்பிட்டார். எனவே, இங்கு நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய மரணத்தையும் பார்க்கிறோம். நாம் பார்க்கிறதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், மேசியா எப்படி மரிக்க முடியும்? தேவ குமாரன் எப்படி மரிக்க முடியும்? ஒருவனாலும் இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவன் வேதாக மத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, "இது சாத்தியமேயில்லை. மேசியா, தேவனுடைய குமாரன், எப்படி மரிக்க முடியும்? அவர் மரிக்க முடியாது," என்று சாதிக்க முடியும். "மரத்திலே தூக்கப் பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று வேதம் சொல்லுகிறது. அப்படியிருக்க மேசியா எப்படி சாபமாக இருக்க முடியும், சொல்லுங்கள்," என்று வாதிடலாம். எனவே, அவர் எப்படி மரிக்க முடியும் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை அந்த நாளில் நாம் அங்கு இருந்திருந்தால், விவரிக்கமுடியாத ஒரு கொடுமையான காட்சியை நாம் பார்த்திருப்போம்.

### பாவங்கள், பாவிகள், இருளின் காரியங்கள், மரணம் ஆகியவைகளின் முடிவு

இந்த மரணத்திற்கு நாம் பார்ப்பதைவிட அதிகமான அர்த்தம் உண்டு. எல்லாரையும்போல் அவர் மரித்தார் என்பதல்ல காரியம். இதற்கு அதிகமான பொருள் உண்டு என்று நாம் புரிந்துகொள்ளத் தொடங்குகிறோம். அவர் *பாவநிவாரண பலியாக* மரித்தார். நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டிருந்தன. அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்துகொண்டு மரித்தார். ஒருவரும் இதை எதிர்பார்க்கவில்லை. அவ்வளவுதானா? இல்லை. இன்னும் அதைவிட அதிகமாகப் பார்க்கிறோம்.

அவர் என்னுடைய பாவங்களைச் சுமந்தார் என்பது மட்டுமல்ல காரியம். அவர் *பாவியாகிய என்னையே சிலுவைக்குக் கொண்டுபோனார்* என்று இன்னும் அதிகமான பொருளைப் பார்க் கிறோம். ஒருவிதத்தில் எப்படியோ நானும் அந்தச் சிலுவையில் அவரோடுகூட மரித்தேன். ஆண்ட

வராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது தமக்குள்ளே இப்படி எவ்வளவோ காரியங்களைக் கூட்டிச்சேர்த்திருந்தார். அவர் உலகத்தின் பாவங்களையெல்லாம் தமக்குள் கூட்டிச்சேர்த்திருந்தார். அவர் பாவங்களை மட்டும் அல்ல. *எல்லாப் பாவிகளையும்கூட* தமக்குள் வைத்திருந்தார்.

இந்த உலகத்தில் தேவனுக்கு விரோதமாக இருந்த எல்லாவற்றையும் தமக்குள் சேர்த்துக் கொண்டார். *இருளின் ராஜ்யத்துக்குரிய எல்லாம் அவரில் நியாயந்தீர்க்கப்பட்டன.*

கடைசியாக மரித்தது என்ன? மரணமே கடைசியாக மரித்தது. அவர் *மரணத்தை ஒழித்தார்.* அவர் மரணத்தை அழித்தார் என்று எழுதியிருக்கிறது. அவரில் மரணம் மரித்தது.

அவருடைய மரணம் நம்முடைய கற்பனைக்கு அப்பாற்பட்ட மரணம். மனிதன் எவனும் கற்பனை செய்ய முடியாத, கேட்கமுடியாத, எதிர்பார்க்க முடியாத ஒரு காரியத்தைத் தேவன் அங்கு செய்துகொண்டிருக்கிறார். அவர் தம் நித்திய நோக்கத்தை அவரில் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். எந்த மனிதனும் அதைப் புரிந்துகொள்ளவில்லை. பலர் அழுதார்கள். ஆனால், ஒருவரும் அதைப் புரிந்துகொள்ளவில்லை.

ஆண்டவராகிய இயேசு தனியராய் மரித்தார். அவர் பிதாவின் சித்தத்தைச் செய்வதற்காகத் தம்மைத் தம் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். ஆனாலும், அவர் பிதாவினால் கைவிடப்பட்டவராக இருந்தார். எப்பேர்ப்பட்ட மரணம்! இதை நம்மால் கிரகித்துக்கொள்ளவோ, புரிந்துகொள்ளவோ முடியாது. இது நமக்கு அப்பாற்பட்ட காரியம்.

## உயிர்த்தெழுதலும், புதிய மனித இனமும்

நாம் மேலும் தொடர்ந்து செல்வோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார். அதற்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம். அவர் உயிர்த்தெழுந்துவிட்டார்! இங்கு நாம் எதைப் பார்க்கிறோம்? இது அற்புதம்! இது ஓர் அசாதாரணமான அதிசயம்! அன்றைக்கு செத்துப்போன அந்த உடலை நான் பார்த்தேன்; அவர் மரித்தார். ஆனால், அவர் இப்போது உயிரோடு இருக்கிறார். இது உண்மையிலே ஓர் அதிசயம். இது அசாதாரணமான ஒரு காரியம். உண்மையிலே நாம் என்ன பார்க்கிறோம்? இதற்குமுன்பே இப்படி நடக்கவில்லையா? மரித்தவர்கள் இதற்குமுன் எழுந்திருக்கவில்லையா? லாசருவுக்கு என்ன நடந்தது என்று நமக்குத் தெரியும். லாசரு மரித்தான்; நான்கு நாட்கள் கழித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவனை உயிரோடு எழுப்பினார்.

நான் ஒரு கதை வாசித்தேன். இந்தக் கதை லாசருவே சொல்வதுபோன்ற ஒரு கற்பனைக் கதை. "நான் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தேன். நாட்கள் செல்லச்செல்ல சுவாசிப்பது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. நான் செத்துக்கொண்டிருந்தேன் என்று எனக்குத் தெரிந்தது. அதற்குப்பின் எனக்கு எந்த நடந்தது என்று தெரியவில்லை. பிறகு 'லாசருவே வெளியே வா' என்று என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிற ஒரு சத்தத்தைக் கேட்டேன். நான் கல்லறையைவிட்டு வெளியே வந்தேன்," என்று லாசரு சொல்வதுபோன்ற கதை.

மரித்துப்போன லாசரு இப்போது உயிரோடு இருக்கிறான். இது மிகவும் அற்புதமான ஒரு காரியம். ஆனால், இது மரணம். இது லாசரு. உரத்த சத்தத்தைக் கேட்கும்வரை அவன் மரித்தவனாக இருந்தான். "லாசருவே வெளியே வா," என்று சொன்னவுடன் அவன் வெளியே வந்தான். அதன் பிறகு லாசருவுக்கு என்ன நடந்தது? லாசரு மீண்டும் மரித்தான். அவனுக்கு இரண்டாவது அடக்க ஆராதனை நடத்தப்பட்டது. லாசரு வெளியே வந்தபோது, மரிப்பதற்குமுன் அவன் எப்படிப்பட்ட மனிதனாக இருந்தானோ அப்படிப்பட்ட மனிதனாகவே அவன் கல்லறையிலிருந்து வந்தான். பிறகு அவன் மீண்டும் மரித்தான்.

ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு இப்படிச் சம்பவிக்கவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரணத்தை வென்றார். அவர் மரிப்பதற்குமுன் எப்படிப்பட்ட மனிதராக இருந்தாரோ அப்படிப்பட்ட மனிதராக அவர் உயிர்த்தெழவில்லை. மாறாக, அவர் மரணத்தை வென்றார், மேற்கொண்டார். அவர் வேறொரு புதிய மனிதனாக உயிர்த்தெழுந்தார். அவர் மரணத்திற்குள் சென்றபோது, உலகத்தின் பாவங்களைச் சுமந்துசென்றார்; அவர் மரணத்தைவிட்டு வெளியே வந்தபோது அவைகளெல்லாம் காணாமல் போய்விட்டன. *மரணம் மரணத்தில் விடப்பட்டது; பாவம் மரணத்தில் விடப்பட்டது; நானும் மரணத்தில் விடப்பட்டேன். மரணத்தைவிட்டு வெளியே வந்தவர் ஒரு புதிய மனிதன்.*

உயிர்த்தெழுந்த நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் உற்றுநோக்கும்போது, அவர் தம் சீடர்களிடம் பேசிய காரியத்தைக் கவனமாகப் பாருங்கள். அவர் மரியாளிடம் சொன்ன காரியம் நினைவிருக்கிறதா? நம் ஆண்டவர் ஒரு வார்த்தைகூட வீணாகச் சொல்லவில்லை. "நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், *நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும்* ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்," என்றார் (யோவான் 20:17). இங்கு பேசுவது யார்? ஒரு மனிதர்! ஒரு மனிதர்!

அதுபோல திபேரியா கடற்கரையிலே அவர் தம் சீடர்களுடன் பேசுவதைப் பாருங்கள் (யோவான் 21:5-14). இங்கு நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உற்றுப் பார்க்கும்போது, "என்னைத் தொட்டுப்பாருங்கள்" என்று அவர் சீடர்களிடம் சொல்லுகிறார். "நான் ஒரு ஆவி இல்லை. நான் ஒரு மனிதன். நீங்கள் என்னைத் தொட்டுப்பாருங்கள்". "புசிக்கிறதற்கு ஏதாவது உங்களிடத்தில் உண்டா?" என்று அவர் கேட்கிறார். அவர் சாப்பிடுவதற்கு சீடர்கள் தங்களிடம் இருப்பதை நடுக்கத்தோடு அவரிடம் கொடுக்கிறார்கள். அவர் அவர்களுக்குமுன்பாக நின்று சாப்பிடுகிறார். அவர் தேனும், மீனும் சாப்பிட்டார். அவர் அவர்களைவிட்டுப் போனபிறகு, அங்கு தட்டில் சில மீன் முட்களும், கொஞ்சம் தேன் அடையும் இருந்திருக்கும். அவர் அவர்களிடையே நின்றார். அவர் ஒரு மனிதர். அவர் மெய்யானவர். ஆனால், அவர் மறைந்துவிட்டார். அவர் நடந்துவெளியே போகவில்லை. அவர் தோன்றினார், மறைந்துவிட்டார்.

இவர் வித்தியாசமான மனிதர். அவர் படைக்கப்பட்ட இந்த மண்டலத்தைச் சேர்ந்தவர். அதே நேரத்தில் அவர் பார்க்கமுடியாத மண்டலத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கிறார். இவர் இந்த இரண்டு மண்டலத்தையும் சேர்ந்தவராக இருக்கிறார். மெய்யாகவே **இது ஒரு புதிய மனுக்குலம்**.

## பரமேறுதலும், மகிமைப்படுத்தப்படுதலும்-மனிதன்

தேவனுக்கு ஒரு நோக்கம் உண்டு. இந்த நோக்கம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் செய்து முடிக்கப்படுகிறது. நாம் அவரைப் பார்த்தோம். நாம் அவரைப் பார்த்து அல்லேலூயா என்று ஆர்ப்பரிக்கிறோம். இதோ ஒரு மனிதர்! *இந்த மனிதனில் ஜீவன் இருக்கிறது*. பின்பு *மரித்த* இந்த மனிதனைப் பார்த்தோம். நாமும் அவரோடுகூட மரித்தோம் என்று பார்த்தோம். ஏன் என்று நமக்குத் தெரியும். ஏனென்றால், இந்தக் கோதுமை மணி ஒரேவொரு மணியாகத் தனித்திருப்பது தேவனுடைய நோக்கம் அல்ல. பின்பு அவர் *உயிர்த்தெழுந்ததைப்* பார்க்கிறோம். அவர் மரித்தபோது நீங்கள் அவரில் இருந்திருந்தால், அவர் உயிர்த்தெழுந்தபோது நீங்கள் எங்கே இருந்தீர்கள்? அவரில்! நீங்கள் அவரில்தான் இருந்தீர்கள். ஒரு *புதிய மனுக்குலம்.* எல்லாம் முடிந்துவிட்டதா? தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டாரா? ஒரு புதிய மனுக்குலம் இருக்கிறது. பதில் என்ன? இல்லை. இன்னும் முடியவில்லை.

இன்னொரு காரியம் நடைபெற வேண்டும். நிச்சயமாக நம்மால் இதைப் புரிந்துகொள்ள முடியாது. ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபிறகு, அவர் ஒரு படி எடுக்க வேண்டியிருந்தது. அவர் *மகிமைப்படுத்தப்பட்டார்.* அவரிடம் ஏற்கெனவே போதுமான மகிமை இருக்கவில்லையா? பிதாவானவர் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயிரோடு எழுப்பி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு வழங்கினார். அவரை எல்லாவற்றிற்கும்மேலாக உன்னதத்துக்கு உயர்த்தினார். அவரைத் தம் வலது பாரிசத்தில் அமரச்செய்து அவரை மகிமைப்படுத்தினார் (பிலி. 2:9-11). அவர் உயர்த்தப்பட்டார். ஏனென்றால், அவர் தேவனுடைய குமாரன். அவருக்குரிய இடம் அதுதான். ஆனால், அதுவல்ல காரியம். காரியம் என்னவென்றால் நாம் அவரை அங்கு உற்றுப்பார்க்கும்போது, நாம் பரத்தை நோக்கிப்பார்க்கும்போது, பிதாவின் வலது பக்கத்தில் இருக்கிறவரை, எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை உடையவரை நாம் பார்க்கிறோம். நாம் யாரைப் பார்க்கிறோம்? ஒரு மனிதனைப் பார்க்கிறோம். ஒரு மனிதப் பிறவியைப் பார்க்கிறோம். அவர் அங்கு பரத்தில் இருக்கிறார்.

## கிறிஸ்துவின் சரீரமாகிய சபை

தேவனுக்கு ஒரு நோக்கம் உண்டு. தேவன் தம் நோக்கத்தைத் தம் குமாரனில் செய்துமுடித்தார். நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உற்றுநோக்கும்போது, அவர் பரத்திற்கு உயர்த்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம் என்று பவுல் சொல்லுகிறார். "அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படிச் செய்தார்" (எபே. 1:21). அவர் எல்லாவற்றிற்கும் தலையாக

அமர்த்தப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்," (எபே. 1:23) என்றும் பவுல் கூறுகிறார். அவர் சபைக்கும் தலையாக இருக்கிறார். பவுல் எதைப் பார்க்கிறார்? சபையைப் பார்க்கிறார். உங்களால் அதைப் பார்க்க முடிகிறதா? நீங்கள் யாரைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? உன்னதத்தில் வீற்றிருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்? நாம் அவரையும், அவருடைய சரீரமாகிய சபையாகிய மீட்கப்பட்டவர்களையும் பார்க்கிறோம். இது அற்புதமான ஒரு இரகசியம்.

ஒரு நபரையும் அவருடைய சரீரத்தையும் (உடலையும்) பிரித்துப் பார்க்க முடியும் என்றும், ஒருவனுடைய உடலை அவனைவிட்டுப் பிரிக்க முடியும் என்றும் சில சமயங்களில் நாம் நினைக்கிறோம். தலையையும் உடலையும் பிரிக்க முடியாது. என்னைப் பார்க்கும்போது நீங்கள் என் உடலைப் பார்க்கிறீர்கள். இது ஒரு பெரிய இரகசியம்.

தேவன் தம் நித்திய நோக்கத்தைத் தம் குமாரனில் செய்துமுடித்திருக்கிறார். *ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு வழியோ, உபாயமோ அல்ல. அவரே தேவனுடைய திட்டத்தின் முடிவாக இருக்கிறார்.* இது மிகவும் அற்புதமானது.

## நிஜம் (மெய்) நம் ஆவியில் இருக்கிறது

இதன் நிஜம், மெய், எங்கிருக்கிறது? இதன் நிஜம் பரலோகத்தில் இருக்கிறது என்று நாம் சொல்லலாம்; நிஜம் பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கிறது என்று நாம் சொல்லக்கூடும். ஆனால், நான் வேறொன்றைச் சொல்லுகிறேன். இந்த நிஜம், மெய், உங்களில் இருக்கிறது. நம்மில் எங்கு இது நிஜமாக்கப்பட்டிருக்கிறது? என்னைப் பார்க்கும்போது என்னில் எந்த மகிமையையும் என்னால் பார்க்கமுயடிவில்லை. என்னில் பலவீனங்களையும், தோல்விகளையும்தான் நான் பார்க்கிறேன்; என்னிடத்தில் நான் தூய்மையைப் பார்க்கவில்லை. என் பாவத்தைக்குறித்த உணர்வு என்னிடத்தில் இருக்கிறது. நான் கர்த்தருக்குள் வளர்ந்துசெல்லச்செல்ல "நான் எவ்வளவு பெரிய பாவி" என்ற ஆழமான உணர்வுதான் என்னிடத்தில் மேலோங்கிநிற்கிறது.

அப்படியானால், இந்த நிஜம் எங்கிருக்கிறது? ஆண்டவராகிய இயேசு பரமேறிச்சென்றிருக்கிறார். "எல்லாம் முடிந்தது" என்று அவர் சொன்னார். "வெற்றி பெற்றாகிவிட்டது" என்று சொன்னார். ஏற்கெனவே செய்துமுடித்தாயிற்று! இது முடிந்தது! இது நிறுவப்பட்டுவிட்டது! எங்கு? ஆவியில். உங்கள் ஆவியில். உங்களுடைய அந்தப் பகுதியை உங்களால் அவ்வளவு எளிதில் தொட்டுவிடமுடியாது.

"உன் உடலைக்குறித்து கொஞ்சம் சொல்," என்று சொன்னால், "நான் இத்தனை அடி உயரம், என் முடியின் நிறம் கருப்பு, என் கண்ணின் நிறம் இப்படி," என்று நம் உடலைப்பற்றிச் சொல்வது மிகவும் எளிது. இல்லையா? "உன் ஆத்துமாவைக்குறித்து கொஞ்சம் சொல்," என்று சொன்னால், "நான் மிகவும் சந்தோஷமான நபர், நான் மிகவும் அறிவாளி, நான் கொஞ்சம் வாயாடி, நான் என்னைப்பற்றி அதிகமாகவே பேசுவேன்," என்று சொல்லலாம். அதன்பின், "சரி, உன் ஆவியைக்குறித்துக் கொஞ்சம் சொல்," என்று சொன்னால் அது மிகவும் கடினம். நம் மனதைப் பயன்படுத்தி நம் ஆவியைப் பார்க்க முயன்றால் அதைப் பார்க்கமுடியாது; நம் கைகளால் அதைத் தொடமுடியாது. ஆனால், மனிதனுக்கு ஆவி என்று ஒன்று இருக்கிறது.

## நம் ஆவியில் பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர் மனிதனுடைய ஆவியில் வந்து வாசம்பண்ணுகிறார். பரிசுத்த ஆவியானவர் உன்னில் வந்து வாசம்பண்ணுகிறாரா? உன்னில் எங்கு வாசம்பண்ணுகிறார்? எங்கு இருக்கிறார்? நாம் என்ன சொல்ல முடியும்? சில சமயம் அவர் நம்மில் இருப்பதுபோல் தோன்றுகிறது. சில சமயம் அவர் நம்மில் இருப்பதுபோலத் தோன்றுவதேயில்லை. ஆனால், நிஜம் என்னவென்றால் பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியில் வாசம்பண்ணுகிறார். "கர்த்தரோடிசைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்," (1 கொரி. 6:17) என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன.

பரிசுத்த ஆவியானவர் தாம் எங்கு வாசம்பண்ண வேண்டும் என்பதில் மிகவும் குறியாக இருக்கிறார். அவர் அசுத்தமான இடத்திலே வாழ்வதற்கு வரவில்லை. அவர் கழுவப்பட்டவனிடத்தில், எல்லா அநீதியிலிருந்தும் கழுவப்பட்டவனிடத்தில், வாசம்பண்ண வந்திருக்கிறார். இந்த நிஜம்,

இந்த மெய், உயிர்த்தெழுந்த கர்த்தரின் இந்த மகிமை, நம் ஆவியில் இருக்கிறது. இது நம் ஆவியில் இருக்கிற நிஜம்.

நம் ஆவியைப் பார்க்கிறதற்கு நமக்குக் கண்கள் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்! அப்போது ஒருவேளை நம் ஆவியில் இருக்கும் மகிமையைக் காணும்போது நம் கண்கள் குருடாய்ப்போய்விடலாம். பரிசுத்த ஆவியானவர்தாமே நம் ஆவியில் வாசம்பண்ணுகிறார்.

எபேசியர் நிருபத்தில் நாம் அந்தப் பகுதியை வாசித்தபோது, பவுல் சொல்லுகிற ஒரு காரியத்தை நீங்கள் கவனித்தீர்களா? 12ஆம் வசனம். "அவரைப்பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது." பல வேளைகளில் நாம் மிகவும் சிறியவர்களாக உணர்கிறோம். நம்மால் தேவனை அணுகமுடியாது என்பதுபோல் உணர்கிறோம். நாம் மிகவும் தூரமாக இருப்பதாக உணர்கிறோம். ஆனால், தேவன் உங்கள் ஆவியில் செய்துமுடித்திருப்பதை, நிறுவியிருப்பதை, நிலைநாட்டியிருக்கிற நிஜத்தை, ஒரு கணம் நீங்கள் விசுவாசித்தால் அப்போது உங்களுக்குத் தைரியமும், திடநம்பிக்கையும் உண்டாயிருக்கும். அப்போது, அவருடைய பிரசன்னத்துக்குள் நுழைய எப்படிப்பட்ட திறந்த கதவு இருக்கிறது என்பதை நாம் காண்போம்.

## முழுமையான இரட்சிப்பு

ஆகவே, சுருக்கமாகச் சொல்வதானால், நம் இரட்சிப்பு இன்னும் முழுமையாகவில்லை, முடிந்து விடவில்லை. சில காரியங்கள் ஏற்கெனவே நிறைவேறிவிட்டன என்றும், இன்னும் சில காரியங்கள் நிறைவேறவில்லை என்றும் நாம் வாசிக்கின்றோம். *செய்துமுடிக்கப்பட்ட சில காரியங்களையும், இன்னும் செய்துமுடிக்கப்படாத சில காரியங்களையும்* நாம் பார்க்கிறோம். ஒரு பக்கம், நாம் நீதிமான்களாக்கப்பட்டிருகக்கிறோம் என்றும், மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்றும் வாசிக்கிறோம். ஆனால், இன்னொரு பக்கம், நாம் முன்னேறிச் செல்ல வேண்டும் என்றும், இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும் என்றும் பார்க்கிறோம்.

ஒரு பக்கம், தேவனுடைய வேலை நம் *ஆவியில் செய்துமுடிக்கப்பட்டுவிட்டது*. ஆனால், அது நம் *ஆத்துமாவில் இப்போதுதான் அவருடைய வேலை தொடங்கியிருக்கிறது*. தேவன் நம் வாழ்க்கையில் *மறுசாயலாக்குதல்* என்ற வேலையைத் தொடங்கியிருக்கிறார். நம் உடலின்படியும், நம் ஆத்துமாவின்படியும் வாழ்வதற்கு உலகம் கற்றுக்கொடுக்கிறது. ஆனால், நம் ஆவியின்படி வாழ்வதற்குத் தேவன் நமக்குக் கற்றுக்கொடுத்துக்கொண்டிருக்கிறார். இந்த வேலை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். இறுதியாக, தேவன் இந்த உடலோடு இடைப்படுவார்.

"நான் பரலோகத்துக்குப் போகப்போவதில்லை" என்று நான் சில சமயங்களில் மக்களிடம் சொல்வதுண்டு. நீங்கள் பரலோகத்துக்குப் போகப்போகிறீர்களா? நான் போவதில்லை. நான் பூமிக்குப் போகிறேன். ஒரு புதிய சிருஷ்டிப்பு! வேதவாக்கியங்கள் அங்குதான் முற்றுப்பெறுகின்றன. புதிய வானம், புதிய பூமிதான் வேதாகமத்தின் நிறைவு. நாம் மறுவுருவாக்கப்படுவோம். நமக்கு உடல் இருக்கும். அதைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால், தேவன் உடலை விரும்புகிறார். தேவன் மனிதனை உண்டாக்கியபோது அவனுக்கு உடலைக் கொடுத்தாரே! புதிய படைப்பின் மகிமையை யாரால் கற்பனைசெய்து பார்க்கமுடியும்? மரணம் ஜீவனால் விழுங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பார்க்கமுடியாதபடி நம் ஆவியில் இருக்கும் அந்த மகிமை நம் ஆத்துமாவிலும் உடலிலும் முழுமையாக வெளியாக்கப்படும். அது நித்திய யுகங்களின் புதிய ஆரம்பம்.

**ஜெபம்:** அன்பின் பிதாவே, உம்முடைய குமாரனுடைய இரகசியத்துக்காக நாங்கள் உம்மைத் துதிக் கிறோம், உம் நாமத்தை உயர்த்துகிறோம். நாங்கள் உம்மை மகிமைப்படுத்துகிறோம். எந்த மனிதனும் ஒருபோதும் கற்பனைசெய்ய முடியாத, கனவுகாணமுடியாத காரியத்தை நீங்கள் எங்களுக்காகச் செய்துமுடித்திருக்கிறீர். இப்போதும்கூட நாங்கள் உம் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை நிழலாட்டமாகத்தான் காணத் தொடங்கியிருக்கிறோம். ஆனால், உம்முடைய குமாரனில் முதற்பலனைப் பார்க்கிறோம். முதற்பலன் வரப்போகிற அறுவடையின் ஆரம்பம் என்பதற்காக உம்மைத் துதிக்கிறோம், மகிழ்ச்சியடைகிறோம். ஆண்டவரே, நாங்கள் வருகிறோம். நாங்கள் உம்மை முகமுகமாய்க் காண்போம். நாங்கள் உம்மை நித்தியமாக மகிமைப்படுத்துவோம். நாங்கள் *கிருபை, கிருபை, கிருபை* என்று ஆர்ப்பரிப்போம். உன்னதத்திலே தேவனுக்கு மகிமை உண்டாவதாக. ஆண்டவரே, நீர் எங்களை அந்தநாள்வரை காத்துக்கொள்ளுமாறும், தொடர்ந்து

முன்னேறிச் செல்வதற்கும், உம்முடைய பிள்ளைகள் உம்மைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்று நீர் விரும்புகிற எல்லாவற்றையும் அறிந்துகொள்வதற்கும் வாஞ்சிக்கிறோம். எங்களைச் சேர்த்துக் கட்டுவீராக. எங்கள் நடுவில் உம் குமாரனை மகிமைப்படுத்தும். இயேசுவின் விலையேறப்பெற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம், பிதாவே, ஆமென்.